செய்தி வெளியீடு எண் : 1299 நாள் : 27.08.2024

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கிய ஏழு கணித்தமிழ் மென்பொருள்கள், 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூல் வெளியீடு – மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் வெளியிட்டார்.**

தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள ஏழு மென்பொருள்களும், 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூலும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களால் இன்று (27.08.2024) தமிழ் இணையக் கல்விக்கழகக் கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டன.

இணையம் வழியாக உலகமெங்கும் தமிழைக் கொண்டுசேர்த்தல், தமிழ் மரபு, பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைப் பொதுமக்களிடம் கொண்டுசெல்லுதல், மின் நூலகத்தை உருவாக்கிப் பராமரித்தல், கணித்தமிழ்ச் செயல்பாடுகளை வளர்த்தெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு அரும்பணிகளை ஆற்றிவரும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஒப்பற்ற செயல்பாட்டுக்கு மேலும் பெருமை சேர்க்கப்போகும் ஏழு மென்பொருள்கள் இன்று மக்கள் பயன்பாட்டுக்கு வருகின்றன. செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனத் தமிழ்கூறும் நல்லுலகம் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இந்த ஏழு மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியப் பதிப்பி, தமிழ் உரையாடி, கல்வெட்டுப் படிப்பான், தமிழ் இலக்கணம் கற்றுணரி ஆகிய நான்கு மென்பொருள்களும் தமிழ்நாடு மென்பொருள் மேம்பாட்டு நிதியில் உருவாக்கப்பட்டவை. இதேபோல, ஏழு கணித்தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்படும் என்று சட்டமன்ற அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. அவற்றுள் முதலாவதாக, கலைஞர் இலக்கணப் பகுப்பி என்ற மென்பொருள் கணித்தமிழ்24 மாநாட்டில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, தமிழ் ஆர்வலர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதைத்

தொடர்ந்து, பொருளாய்வி மென்பொருள், தமிழ் கிளை மொழிப் பேச்சொலியை எழுத்து வடிவில் மாற்றும் மென்பொருள், தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைக்கும் மென்பொருள் ஆகிய மூன்றும் இன்றைய நிகழ்வில் வெளியிடப்பட்டன. மீதமுள்ள மூன்று மென்பொருள்களும் இறுதிக்கட்ட பணியில் உள்ளன.

அனைத்துத் தரப்பினரும் மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏழு மென்பொருள்களையும் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் (https://www.tamilvu.org/) கட்டணமின்றிப் பதிவிறக்கிக்கொள்ளலாம். இந்த மென்பொருள்கள் குறித்த சிறு குறிப்பு பின்வருமாறு:

1) **தமிழ் இலக்கியப் பதிப்பி (Index Concordance):** இம்மென்பொருள் தமிழ் இலக்கியங்களுக்குச் சொல்லடைவு, தொடரடைவு போன்றவற்றைத் தொகுத்து வழங்குகிறது.
2) **தமிழ் உரையாடி (Chatbot for Tamil Virtual Academy's Lessons):** தமிழ் இணையக் கல்விக்கழகச் சான்றிதழ்க் கல்வி, பட்டயம் மற்றும் பட்டப் படிப்புக்கான பாடங்களை எளிதாகப் படிக்கவும் புரிந்து கொள்ளவும் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.
3) **கல்வெட்டுப் படிப்பான் (Inscription Reader):** இம்மென்பொருள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கி.பி. 6 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுகளைத் தற்காலத் தமிழ் எழுத்துகளாக மாற்றுகிறது.
4) **தமிழ் இலக்கணம் கற்றுணரி (Tamil Learning App):** மாணவர்கள் தமிழ் மொழியினை எளிய முறையில் விளையாட்டு மூலம் கற்றுக்கொள்ளும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.
5) **பொருளாய்வி மென்பொருள் (Parts of Speech & Semantic Roles Labelling):** இம்மென்பொருள் தமிழ் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்கு முறையான இலக்கணக் குறியீடுகளை வழங்குகிறது, மேலும் இம்மென்பொருள் அவ்வாக்கியத்தில் உள்ள சொற்பொருள் பாத்திரங்களைப் (Semantic Roles Labelling) பகுப்பாய்வு செய்கிறது.

6) **தமிழ்ப் பேச்சொலியை (வட்டார வழக்கு) எழுத்து வடிவில் மாற்றுதல் (Text to Speech):** இம்மென்பொருள் தமிழ்க் கிளைமொழிப் பேச்சொலியினை (Regional Dialects) நேரடியாக எழுத்து வடிவத்திற்கு மாற்றும் திறனைக் கொண்டது. இது தமிழ் நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதிக் கிளைமொழிகளை அடையாளம் கண்டு எழுத்து வடிவமாக மாற்றுகிறது.

7) **தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைத்தல் (Hyphenation for Tamil Typesetting):** இம்மென்பொருள், தமிழ் சொற்களை அசையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கிறது, இதன் மூலம் பத்திகள் நன்றாக வரிசைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன.

அடுத்த நிகழ்வாக, அன்னைத் தமிழை எழுத்துப் பிழைகள் மற்றும் இலக்கணப் பிழைகளின்றி எழுதுவதற்காகத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூல் வெளியிடப்பட்டது. தமிழ் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் அடிப்படையை எளிய தமிழில் சீர்மிகு முறையில் தொகுத்துத்தந்திருக்கும் நூல் இது. சொற்பிரிப்பு, சொற்சேர்க்கை முறைகள், புணர்ச்சி விதிகள், மொழிநடை எனப் பல்வேறு பொருண்மைகள் இந்நூலில் கையாளப்பட்டுள்ளன. இந்நூலை மாண்புமிகு அமைச்சர் வெளியிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர், கணித்தமிழ் ஆர்வலர்கள், அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu